
# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம் : 06 கணை : 37 யூன் - 2025




Since : 2020 May 18

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...


**பிரதம ஆசிரியர்**

கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்கள்**

திரு. ம.நிரேஸ்குமார்

திரு. நா.அம்பிகைபாகன்

திரு. ஞா.கயூரன்

**வெளியீடு**

குருசேத்திரம் வெளியீடு, யாழ்ப்பாணம்.



**தொடர்புகளுக்கு**

gurusethhiram@gmail.com



குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!


## உள்ளே...


காட்சியும் கருத்தும் 1

ஆசிரியர் பார்வையில்... 2

ஆய்வு இடைவெளிகள்: 3

முறையியல் இடைவெளி 3

முதல் நாள் சம்பளம் 5

சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும் 6

பெண்ணின் கண்ணீரில் கரைந்த சமூகமே! 9

“இன்பா”வின் சிந்தனைத் தொடர் – 27 10

திறன் வகுப்பறை: முக்கியத்துவம், தேவைகள் மற்றும் விளக்கக்குறிப்புகள் 11

உலகப் புகழ்பெற்ற ஓவியங்களில் மறைந்திருக்கும் மர்மங்கள் 14

பெண்ணின் விடியல்! 15

5S முறையும் அவற்றின் விளக்கங்களும் 17

Dhora ‘WIN’ வரிகள் 19

கல்வி 4.0 எதிர்கால மாற்றத்திற்கான திறவுகோள் (01) 20

கதை வழி அற மொழி 22

பேசும் படங்கள் 23

# காட்சியும் கருத்தும்

கலாநிதி சு.பரமானந்தம்






# ஆசிரியர் பார்வையில்...

குருசேத்திரம் களம் 6 இன் 37 வது இதழாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். குருசேத்திரம் படைப்பாளிகளுக்கும் ஆர்வலருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றேன்.


அரசியல் பிரதிநிதித்துவத்தின் பிளவுகள் சிறுபான்மையின உரிமைகள் பற்றிப் பேசுவதை சிக்கலாக்கியுள்ளன

ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ் பல்கலைக்கழக ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டு

(நா.தனுஜா)

வெறுமனே சமத்துவம் தொடர்பான வாக் செலுத்தவில்லை என்பதையே காண்பிக்கின் றது. எனவே தற்போது சிறுபான்மையினரின் துவதுடன் அக்குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

14/06/2025

வீரகேசரி – 14.06.2025

கடந்த ஆசிரியர் தலையங்கத்தில் தமிழர் அரசியல் பற்றி யோகர் சுவாமிகள் கூறிய கருத்தான "தமிழர் வேட்டியை கிழித்துக் கட்டுகின்றான்" என்ற நிலையில்... தற்போது ஏதாவது மாற்றம் ஏற்படுமோ என்ற சிந்தனை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுகின்றது. நிலையான கொள்கையை நோக்கிய ஒற்றுமை முனைப்புக்களை வரவேற்றேயாக வேண்டும். மாறாக சுயநலத் திற்காகவும் பதவிகளை பெற்றுக் கொள்வதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்ற புரிந்துணர்வுகள் காலத்தைக் கடத்துவ தாக அமைந்துவிடுவதுடன் எம்மை நாங்களே மீண்டும் மீண்டும் பலவீனப்படுத்துவதாக அமைந்துவிடும்.

எமது நோக்கங்கங்கள் ஒன்றாக இருக்கும் போது ஏன் முரண்பாடுகள் ஏற்படவேண்டும் என்று சிந்திக்க வேண்டும். தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நோக்கம் "மக்களுக்கான சிறந்த சேவையை" வழங்குவதே. ஆக நல்ல விடயங்களை முன்னெடுப்பதில் யாரும் தடைபோட மாட்டார்கள். எனவே மக்களின் தேவையறிந்து செயற்பட அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமாக இது அமைகின்றது.

13.06.2025 பத்திரிகைச் செய்தியில் 11 வருடங்களில், 269 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து இந்தியா மீட்டுள்ளதாக உலக வங்கி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இது எவ்வாறு சாத்தியமானது என்பது பற்றிக்குறிப்பிடும் போது, அ. எண்மிய சேவைகளின் விரிவாக்கம், ஆ. கிராமப்புற உட் கட்டமைப்புக் களின் மேம்பாடு போன்றவற்றின் மூலம் இதனை அடையக் கூடியதாக இருந்ததாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து நாமும் தற்போதைய உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் முயற்சிசெய்து பார்க்கலாம். வெறுமனே தங்கிவாழும் நிலையிலிருந்து கிராமியமட்ட சமூக பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கு தேவையான செயற்றிட்டங்களான நவீன விவாசயம், கடற்றொழில், சுற்றுலாத்துறை, புதுப்பிக்கத்தக்க சக்தி உருவாக்கம் போன்ற விடயங்களில் விரிவாக்க முனைப்புக்களையும் மேற்கொள்ளும் போது நாங்களும் எமது பொருளாதாரத்தை மேம்படுத்துடன், மக்களின் வாழ்வாதாரம் மேம்படும். தனிமனித அரசியலுக்கப்பால் நாம் ஒவ்வொருவரும் "நிலைபேறான கிராமிய மட்ட அபிவிருத்தி" பற்றி சிந்தித்து செயற்படுவோம்.

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே ஆரம்பிக்கட்டும்... மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை..

என்றும் அன்புடன்,
சு.பரமானந்தம்.
**PhD in Education**

# ஆய்வு இடைவெளிகள்: முறையியல் இடைவெளி

- கலாநிதி சு.பரமானந்தம் -

ஆய்வு முறையியல் இடைவெளி என்பது ஆய்வில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற துறைகளில் ஒரு குறிப்பிட்ட துறையில் இருக்கும் ஆய்வுகள் பொருத்தமான ஆய்வு முறைகள் இல்லாமல், முழுமையற்ற அல்லது முடிவில்லாத கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும் பகுதிகளைக் குறிக்கிறது. ஆய்வாளர்கள் மிகவும் பொருத்தமான வழிமுறைகளைப் பயன்படுத்தத் தவறும் போது அல்லது குறிப்பிட்ட ஆய்வு வினாக்களுக்கு விடைகாண பொருத்தமான அணுகுமுறைகள் இல்லாதபோது இந்த இடைவெளி பெரும்பாலும் ஏற்படுகின்றது. ஆய்வாளர்கள், மாறிகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாதபோது, பொருத்தமான முறைகளைத் தெரிவுசெய்யாத போது, ஆய்வுகளை மீளாய்வு செய்யத் தவறும்போது அல்லது நீண்ட கால விளைவுகளைக் கவனிக்க நீண்டகால ஆய்வுகளை மேற்கொள்ளாத போதும் முறையியல் இடைவெளிகள் உருவாகலாம்.

## கல்வி ஆய்வில் முறையியல் இடைவெளிகளின் உதாரணங்கள்:

### 1. முன்பிள்ளைப் பருவக் கல்வியின் தாக்கம் குறித்த நெட்டாங்கு ஆய்வுகள் இல்லாமை

முறையியல் இடைவெளி: பல ஆய்வுகள் ஆரம்பகால குழந்தைப் பருவக் கல்வி (ECE) திட்டங்களின் குறுகிய கால தாக்கத்தை மதிப்பிடும் அதே வேளையில், கல்வியின் விளைவுகள், சாதனை மற்றும் சமூக விளைவுகளில் நீண்டகால விளைவுகளை ஆராய நீண்ட காலத்திற்கு குழந்தைகளைப் பின்தொடர்ந்து மேற்கொள்ளும் நீண்டகால ஆய்வுகள் இல்லை அல்லது குறைவு.

நீண்டகால தரவு இல்லாமல், மாணவர்கள் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் மூலம் முன்னேறும் போது ஆரம்பகால குழந்தைப் பருவக் கல்வியின் நன்மைகள் நீடிக்குமா என்பதைத் தீர்மானிப்பது கடினம் (கேம்ப்பெல் & ராமே, 2007).

### 2. கல்வியில் தலையீடுகளை மதிப்பிடுவதில் எழுமாற்று கட்டுப்பாட்டு சோதனைகளின் (RCTs) பயன்பாடு குறைவு அல்லது இல்லை

முறையியல் இடைவெளி: பல கல்வி ஆய்வுகளில் எழுமாற்று கட்டுப்பாட்டு சோதனைகளின் (Random Controlling trails) பயன்பாடு இல்லை, இவை கல்வியில் தலையீடுகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான உயர் தரநிலையாகக் கருதப்படுகின்றன. பல ஆய்வுகள் அவதானிப்பு அல்லது தொடர்பு வடிவமைப்புகளை நம்பியுள்ளன, அவை காரண உறவுகளை வலுப்படுத்துவதில் குறைவான திறன் கொண்டவையாகக் காணப்படுகின்றது.

RCTsகள் கல்வித் திட்டங்களின் செயல்திறனுக்கான வலுவான ஆதாரங்களை வழங்க முடியும், ஆனால் அவற்றின் பயன்பாடு பெரும்பாலும் ஒழுக்க நெறிமுறைகள் பற்றிய கவனம், பௌதீக வளங்கள் தொடர்பான சவால்கள் அல்லது நிதி வளங்களின் கட்டுப்பாடுகள் காரணமாக குறைவாகவே உள்ளது (ஹிக்கின்ஸ் & கிரீன், 2011).

**3. ஆய்வில் பன்முகத்தன்மை கொண்ட மாணவர் ஆய்வுக் குடித்தொகையில் குறைவான பிரதிநிதித்துவம்**

முறையியல் இடைவெளி: பல கல்வி ஆய்வுகள் முதன்மையாக ஒரே மாதிரியான அல்லது முக்கியமாக நடுத்தர வர்க்க மக்கள்தொகையில் கவனம் செலுத்துகின்றன. வெவ்வேறு இன, சமூக பொருளாதார மற்றும் மொழியியல் பின்னணிகளைச் சேர்ந்தவர்கள் அல்லது குறைபாடுகள் உள்ளவர்கள் போன்ற மாணவர்களின் மாறுபட்ட பின்னணிகளைக் கணக்கிடும் ஆய்வுகளின் பற்றாக்குறை உள்ளது.

ஆய்வில் பல்வேறு மாணவர் குடித்தொகையை சேர்க்கத் தவறுவது கண்டுபிடிப்புகளின் பொதுமைப்படுத்தலைக் கட்டுப்படுத் தலாம் அல்லது கல்வியின் சமத்துவமின்மையை நிவர்த்தி செய்யத் தவறிவிடும் (கார்ட்டர், 2012).

**4. சுய-அறிக்கை தரவுகளில் அதிக நம்பிக்கை**

முறையியல் இடைவெளி: கல்வி ஆய்வின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதி ஆசிரியர்கள், மாணவர்கள் அல்லது பெற்றோரிடமிருந்து சுய-அறிக்கையிடப்பட்ட தரவைச் சார்ந்து ள்ளது, இது சமூக விருப்பு, வெறுப்பு, அல்லது தவறான நினைவுகூருதல் போன்ற காரணிகளால் சார்புடையதாக இருக்கலாம்.

சுய-அறிக்கையிடப்பட்ட தரவு எப்போதும் உண்மையான நடத்தைகள் அல்லது அனுபவங்களைப் பிரதிபலிக்காமல் போகலாம், மேலும் கல்வி நடைமுறைகள் மற்றும் விளைவுகளைப் பற்றிய மிகவும் துல்லியமான விளக்கத்தைப் பெறுவதற்கு மிகவும் புறநிலை தரவு சேகரிப்பு முறைகள் (எ.கா. கண்காணிப்பு ஆய்வுகள், செயல்திறன் மதிப்பீடுகள், அவதானிப்பு அறிக்கைகள்) தேவைப்படுகின்றன (முல்லர் மற்றும் பலர், 2017).

**5. கலப்பு-முறைகள் ஆய்வுகள் இல்லாமை**

முறையியல் இடைவெளி: கல்வி நிகழ்வுகளைப் புரிந்துகொள்வதற்கு அளவுரீதியான மற்றும் பண்புரீதியான முறைகள் இரண்டும் முக்கியத்துவம் பெற்றதாக இருந்தாலும், பல ஆய்வுகள் ஒரு அணுகுமுறையை மற்றொன்றின் இழப்பில் பயன்படுத்துகின்றன. கலப்பு முறை ஆய்வை பயன்படுத்துவதில் ஒரு இடைவெளி உள்ளது, இது ஆய்வு வினாக்களின் முழுமையான விடையை வழங்க அளவுசார் மற்றும் பண்புசார் அணுகுமுறைகள் இரண்டையும் ஒருங்கிணைக்கிறது.

கலப்பு-முறை ஆய்வு, புள்ளிவிவர பகுப்பாய்வை நேர்காணல்கள் அல்லது மாதிரி குழுக்களின் வளமான, சூழல் சார்ந்த நுண்ணறிவுகளுடன் இணைப்பதன் மூலம் சிக்கலான கல்விப் பிரச்சினைகளை ஆழமாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக அமையும். (கிரெஸ்வெல், 2014).

**6. ஆசிரியர்-மையப்படுத்தப்பட்ட ஆய்வின் வரையறுக்கப்பட்ட ஆய்வுகள்.**

முறையியல் இடைவெளி: கல்வி ஆய்வின் பெரும்பகுதி மாணவர்களின் விளைவுகளையும் அவற்றின் தாக்கங்களையும் மையமாகக் கொண்டது, எனினும் ஆசிரியரின் புலக்காட்சி அல்லது வகுப்பறையில் ஆசிரியர் நடைமுறைகளை பாதிக்கும் காரணிகளில் அரிதாகவே கவனம் செலுத்தப்படுகின்றது. ஆசிரியரின் பங்களிப்பு, அனுபவம் மற்றும் செல்வாக்கை ஆழமாக ஆராய கற்பித்தலியல் அல்லது விடய ஆய்வுகள் போன்ற

முறைகளைப் பயன்படுத்தும் ஆய்வுகளில் ஒரு இடைவெளி உள்ளது.

ஆசிரியர்கள் கற்றல் செயல்பாட்டில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறார்கள், மேலும் அவர்களின் புலக்காட்சிகள் மற்றும் பிரயோக நடைமுறைகளின் மீது கவனம் செலுத்தும் ஆய்வு சிறந்த தொழில்முறை வளர்ச்சிக்கும் மிகவும் பயனுள்ள கற்பித்தல் உத்திகளை இனங்காணவும் வழிவகுக்கும் (போர்கோ, 2004).

ஒரு ஆய்வின் முறையியல் இடைவெளி, முந்தைய ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்ட ஆய்வு முறைகளில் உள்ள குறைபாடுகள் அல்லது முரண்பாடுகளை அடையாளம் காட்டு கிறது, இதனால் பொருத்தமற்ற அல்லது நம்பகத்தன்மையற்ற கண்டுபிடிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஒரு ஆய்வு வினாவை எதிர்கொள்ளும் விதத்தில் ஒரு வரையறையை கொண்டுள்ளது. இது பெரும்பாலும் மிகவும் துல்லியமான மற்றும் அர்த்தமுள்ள முடிவுகளை அடைய புதிய அல்லது புத்தாக்கமான முறைகள் தேவை என்பதை வலியுறுத்துகின்றது. இது அவற்றின் கண்டுபிடிப்புகளின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் நம்பகத் தன்மையை பாதிக்கக்கூடும். வேறுபட்ட அணுகுமுறையுடன் கூடிய ஒரு புதிய ஆய்வு மிகவும் துல்லியமான அல்லது முழுமையான முடிவுகளை வழங்கலாம் அல்லது குறிப்பிட்ட வரையறைகளை நிவர்த்தி செய்யலாம் என்பதை வெளிப்படுத்துகின்றது.



## முதல் நாள் சம்பளம்

கடின உழைப்பின் பயனாம்
கன்னியத் தொழிலின் பெறுமதியாம்
காசோலையாய் கையில் கிடைத்ததும்
கண்ணீர் மல்கியது என் நெஞ்சம்.

காசோலை மாற்றப்பட்டதும்
காயங்கள் பலவற்றிற்கு மருந்தாகின
தந்தையின் கைகளில் சம்பளமாம்
தவழ்ந்தது அவர் கண்களில் ஆனந்த குழந்தை.

என் கைகளில் மாற்றம் செய்து
ஐந்தாயிரம் அவர் கைகளில் மாறப்பபட்டது
அன்னையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிட்ட நிம்மதியில்
என் மனம்.

காத்த என் தெய்வத்திற்கென்றும்
கற்பித்த என் தெய்வங்களிற்கென்றும்
என் காவல் உடன்பிறப்பிற்கென்றும்
முதல் நாள் சம்பளம் பங்குகளாக்கினேன்.

ஆனாலும் என்னுள்ளே ஆயிரம் யோசனைகள்
உறைவிடம்,திருமணம்,வீட்டுச்செலவு
என்ற சிந்தையில் என் மனம்.

என்னுள்ளே பல திட்டங்கள்
என்னை ஆட்கொண்டது
சேமிப்பின் வழிகள் சூழ்ந்து கொண்டது
சேமிப்பின் உன்னதமும் பற்றிக்கொண்டது
முதல் நாள் சம்பள நாளில்...

- *Miss.Rupitha Maienthirarasa* -
Bt/Bw/Kaayaanmadu Saraswathi viddyalaya




# சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும்

5

- கலாநிதி கி.புண்ணியமூர்த்தி LLB-

இலங்கையிலும் வளர்ந்த நாடுகளைப் போலவே புதிய நூற்றாண்டின் தொடக்கத்தில், மாணவர்களின் அறிவுசார் வளர்ச்சி மற்றும் மனவெழுச்சி நுண்ணறிவுக்குப் பங்களிக்கும் பொதுவான திறன்களைப் பூர்த்தி செய்யும் பாடத் தேர்ச்சிகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அறிவார்ந்த வளர்ச்சிக்குத் தேவையான நல்ல மனதுக்கு அவசியமான ஆரோக்கியமான உடலுடன் மாணவர்களைச் சித்தப்படுத்துவதற்கு ஒரே நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், பெரும்பாலான கருத்துக்கள் பாடசாலை மட்டத்தில் இன்னும் உள்வாங்கப்பட வில்லை. யானையை விபரிக்கும் ஏழு குருடர்களைப் போல புதிய அணுகுமுறையை முன்னெடுத்துச் செல்வதற்குப் பொறுப்பான வர்கள் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானவர்கள், அதே பழைய உட்கட்டமைப்பு மற்றும் நிறுவன முறைகளையே பாடசாலைகளில் தொடர அனுமதிப்பது ஆகியவையே 21 ஆம் நூற்றாண்டின் கலைத்திட்ட சீர்திருத்தங்களை நிறுவனமயமாக்கு வதைத் தாமதப்படுத்தும் இரண்டு முக்கிய காரணங்கள் ஆகும்.

- குறைந்த இடவசதி
- கனமான தளபாடங்கள் கொண்ட திறந்த வகுப்பறைகள்,
- நடமாடும் வசதிகளை விட மையப்படுத்தப்பட்ட வசதிகள் முக்கியத்துவம் பெறுதல்
- குழுப் பணிக்கு மிகவும் பெரியதாகவோ அல்லது சிறிய தாகவோ இருக்கும் வகுப்புகள்,
- செயல்பாடு சார்ந்த கற்றலுக்கான நாற்பது நிமிட நேரத்தின் போதாமை

ஆகியவை இந்த தாமதத்திற்னான மேலதிக காரணங்கள் ஆகும்.

- கல்வியில் அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் மற்றும் பிற பங்குதாரர் குழுக்களைப் இற்றைப்படுத்தப் பொருத்த மற்ற முறைகளைப் பயன்படுத்துதல்,
- பொதுப்பரீட்சையின் வெற்றிக்கு தேவையற்ற கவனம் செலுத்தும் தர உத்தரவாதம்.

- பொருத்தமற்ற மேற்பார்வை வழிமுறைகளைப் பின்பற்றுதல்.
- தகவல் தொடர்புகளைத் தாமதப்படுத்தும் அதிகாரத்துவ நிறுவனக் கட்டமைப்புக்களுடன் தொடர்புபடுதல்.
- பயனுள்ள யோசனைகளை முடக்குவதற்கு அமுக்கக் குழு நடவடிக்கைகளை அனுமதித்தல்.

ஆகியன புதிய கல்விச்சீர்திருத்தம் செழிக்க அனுமதிக்காத பிற காரணங்களாகும்.

தகவல் யுகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய புதிய குடிமக்களைக் கொண்டு சமூகத்தை சித்தப்படுத்துவதற்கும், அடுத்த கல்விச் சீர்திருத்தச் சுழற்சிக்கான தயாரிப்பாகவும், நம் பாடசாலைகளை இன்றளவும் நிலவும் பாரம்பரியக் கல்வி முறைகளிலிருந்து எப்படியாவது விடுவிக்க வேண்டும். இங்கு வெற்றிபெற, அனைத்து பங்குதாரர் குழுக்களையும் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய கல்வியியலாளர்கள், மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் அனைவரும் - 21 ஆம் நூற்றாண்டின் கல்வியின் மதிப்பை அறிந்துகொள்ள புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். குறிக்கோள் அணுகுமுறையிலிருந்து தேர்ச்சி மைய அணுகுமுறைக்குப், பாடக்குறிப்பிலிருந்து செயற்பாட்டுத் திட்டத்திற்கு, மதிப்பீட்டுக் கலாச்சாரத்திலிருந்து கணிப்பீட்டுக் கலாசாரத்திற்கு, மற்றும் ஆசிரியரை மையமாகக் கொண்ட கல்வியிலிருந்து மாணவர் மையக் கல்விக்கு நகர வேண்டும்.

சுகாதாரம் மற்றும் உடற்கல்வியில் சிறப்பு கவனம் செலுத்திப் பாடத்திட்டத்தின் பாடங்களிலிருந்து பெறப்பட்ட பாடத் தேர்ச்சிகளை மேம்படுத்துதல் மற்றும் செயல் அல்லது விசாரணை சார்ந்த அனுபவக் கற்றலில் இருந்து பெறப்பட்ட சமூக, தனிப்பட்ட மற்றும் சிந்தனைத் திறன்கள் வடிவில் உள்ள பொதுவான தேர்ச்சிகளில் கவனம் செலுத்துதல் ஊடாக உடல் வளர்ச்சி, அறிவுசார் வளர்ச்சி மற்றும் உணர்ச்சி நுண்ணறிவு ஆகியவை முக்கிய கூறுகளை உருவாக்க மிகவும் தேவையான ஒருங்கிணைந்த ஆளுமையை உருவாக்க எதிர் வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் அமைய வேண்டும். பாடசாலைகளில் ஆரோக்கியமுள்ள குழந்தைகளை உருவாக்க முயற்சித்தல் வேண்டும்.

இலங்கையில், மொத்த சனத்தொகையில் 18.9 மில்லியனில் 4.3 மில்லியனாக பாடசாலை செல்லும் சனத்தொகை உள்ளது (கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், 2002). எனினும், இலங்கை தொழிலாளர் படை கணக்கெடுப்பு Sri Lanka Labor force Survey (1992) பின்வரும் தகவல்களை வெளிப்படுத்தியது.

1. 60% க்கும் அதிகமான இலங்கையர்கள் க.பொ.த.சா.த (O/L) பரீட்சைக்கு வருவதற்கு முன்னர் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றனர்
2. பெரும்பாலான மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளால் கல்விக்காக முறைமைசார்ந்த வகையில் ஊக்கல் பெறவில்லை.
3. மாணவர்கள் பாடசாலைக்கு வருவது மிகவும் குறைவடைந்துள்ளது (Ranasinghe and Hartog, 2002).
4. கட்டாயக் கல்வி பெற வேண்டிய 5-14 வயதுக்குட்பட்டவர்களில் 14% பேர் இடைவிலகியுள்ளனர்.
5. 20% மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் தோல்வி அடைகிறார்கள் மற்றும் 80% பேர் பொதுப் பரீட்சையில் திருப்தியாகச் சித்தியடைவதில்லை. குறிப்பாக, விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், முதல் மொழி.

6. கலைத்திட்டம் பொருத்தமற்றதாகவும்,பண்புத் தரமற்றதாகவும், தொடர்பற்றதாகவும், சுமையானதாகவும் இருத்தல்.
7. ஆங்கில மொழியில் புலமை இல்லாமை
8. வழக்கமான கற்பித்தல் கற்றல் முறைகள்
9. ஆசிரிய மையக் கற்றல், கற்பித்தல் செயல்முறைகள்
10. பாடப் புத்தகங்கள் ஆதிக்கம் செலுத்துதல்
11. செயல்பாடு அடிப்படையிலான கற்றல், கற்பித்தல் செயல்முறைகள் இன்மை
12. ஆசிரியர்களுக்கு திறமையின்மை குறிப்பாக மாணவர்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதிலும் கணிப்பிடுவதிலும்.
13. மோசமான ஆசிரியர் மாணவர் உறவு
14. அடிப்படை வசதிகளில் ஏற்றத்தாழ்வு
15. நகர ,கிராம வேறுபாடு
16. அதிக போட்டித் தன்மை
17. சமூக மற்றும் கலாசார காரணிகளின் தாக்கம்
18. வெகுஜன ஊடகங்கள், போதைப் பழக்கம், குழந்தைத் தொழிலாளர்கள், போன்ற தாக்கங்கள் (Wijesundara 1999; Presidential Task Force 1997; Labor force survey 1992).
19. பட்டம் பெறுவதன் மூலம் மேல் நிலைகளில் வேலை கிடைக்கும் என்று பட்டதாரிகள் கணக்கிடுகின்றமை

எவ்வாறாயினும், இந்த எதிர்பார்ப்பை அடைவது, பட்டம் பெற்றிருப்பதைச் சார்ந்தது அல்ல, மாறாக பொருளாதாரம் மற்றும் தனிநபர்களின் பின்னணியின் பிற அம்சங்களைப் பொறுத்தது. மேலும் படித்த இளைஞர்கள் விவசாயம் மற்றும் மீன்பிடித்தல் போன்ற வேலைவாய்ப்பைக் காணக்கூடிய துறைகளில் வேலை செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. 21% வேலையில்லாத இளைஞர்கள் இலிகிதர் வேலைகளைத் தேடுகிறார்கள், அதேசமயம் தற்போது கிடைக்கும் வேலைகளில் 4% மட்டுமே இந்த வகையைச் சேர்ந்தவையாகும்.உடல் உழைப்பு இழிவாகப் பார்க்கப்படுவதாகவும், சமூக அங்கீகாரம் இல்லாத மேசன், தச்சு போன்ற துறைகளில் வேலை செய்வதை விட இளைஞர்கள் பெரும்பாலும் வேலையில்லாமல் இருப்பதையே விரும்புகிறார்கள் எனவும் லக்ஷ்மன் (1992) தெரிவிக்கிறார்.இதற்குக் காரணம் இலங்கையின் கல்விமுறைமையிலுள்ள குறைபாடே என்பதே அவரின் கருத்தாகும்.

அரசாங்கத்தில் சம்பளம் பெறும் வேலை என்பது இளைஞர்கள் விரும்பும் இலட்சியமாகும், ஆனால் இது பொருளாதார அடிப்படையில் அபத்தமானது, ஏனெனில் ஒரு கொத்தனார் ஒரு நாளைக்குப் பெறும் வேதனம் ஒரு கீழ்நிலை அரச ஊழியர் பெறும் வேதனத்தைவிட அதிகமானது (குருப்பு மற்றும் ரெங்கநாதன் 2004). வெள்ளாடை வேலைவாய்ப்பின் மீது அளவுகடந்த மதிப்பை அளிக்கும் ஒரு சமூகமாக இளைஞர் சமூகத்தை எமது கல்வி முறைமை மாற்றியுள்ளது. குறிப்பாக இளம் வேலை தேடுபவர்கள் தமக்குக் கிடைக்கும் வேலையைப் பெற்றுக்கொள்ளாமல் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றும் வேலையைக் கண்டுபிடிக்கும் வரை காத்திருக்கின்றனர். இந்த 'காத்திருப்பு காலம்' அனேகமான குடும்பங்களுக்குச் சுமையாக உள்ளது (லக்ஷ்மன் 2002, குணவர்தன 2002).

அதிகாரத்துவம், நீதித்துறை, காவல்துறை மற்றும் குறைந்த அளவில் இராணுவம் போன்ற பெரும்பாலான அரசியல் நிறுவனங்களின் மீது இளைஞர்கள் அதிக அளவு அவநம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்கள்.2024 முதல் காலாண்டில் இளைஞர்களின் வேலையின்மை சதவிகிதம் (வயது 15 - 24 வயது) 20.6 சதவீதமாக உள்ளது. மேலும் ஆண் மற்றும் பெண்களுக்கான வேலையின்மை சதவிகிதம் 15 - 24

வயதுக்குட்பட்டவர்களுக்கு முறையே 16.3 மற்றும் 29.5 சதவீதம் ஆகும்.

இலங்கையில் பொருளாதார ரீதியாகச் செயலற்ற மக்கள் சுமார் 9.3 மில்லியன் உள்ளனர். இவர்களில் 28.8 சதவீதம் பேர் ஆண்கள் 71.2 சதவீதம் பெண்களாவர்.

2024 முதல் காலாண்டில், இலங்கையில் வேலை செய்யும் நபர்களின் எண்ணிக்கை 7.9 மில்லியன். இதில், 49.5 சதவீதம் பேர் சேவைத் துறையிலும், 25.8 சதவீதம் பேர் விவசாயத் துறையிலும், 24.7 சதவீதம் பேர் கைத்தொழில் துறையிலும் ஈடுபட்டுள்ளனர்.2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது 2024 முதல் காலாண்டில்,அனைத்து முக்கிய தொழில் குழுக்களிலும் தொழில் செய்பவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

பெரும்பாலான பணியாளர்கள் தனியார் துறை ஊழியர்களாக உள்ளனர், அவர்களில் பெரும்பாலானவர்கள் சுய வணிகம் செய்பவர்களாக உள்ளனர். விவசாயம் அல்லாத துறையானது இலங்கையில் வேலை செய்யும் சனத்தொகையில் 74.2 சதவீதத்தை உள்ளடக்கியுள்ளது, ஊழியர்கள் மற்றும் சுய வணிகம் செய்யும் பணியாளர்கள் அத்துறையில் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றனர்.

பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதில் இலங்கை வலுவான சாதனைப் பதிவைக் கொண்டுள்ளது, பாலின சமத்துவமின்மை குறியீட்டில் (GII) 159 நாடுகளில் இலங்கை 87வது இடத்தில் உள்ளது, GII 0.386 (UNDP 2016). இலங்கையில் இந்த குறைந்த மதிப்பெண்ணுக்கு பங்களிக்கும் முக்கிய காரணிகள் இரண்டு:

i) அதிக பெண்களின் வேலையின்மை சதவீதம்
ii) பெண்களிடையே குறைந்த அளவிலான அரசியல் பிரதிநிதித்துவம் (UNDP 2016).

தொடரும்...

## பெண்ணின் கண்ணீரில் கரைந்த சமூகமே!

*அழகிய கனவுகளால் உருவானாள் அவள்,*
*அன்பின் வானவில் ஏந்தியவள்.*
*ஆனால், பாசத்தின் பேரொளி மறைய,*
*அழுகை மட்டும் தோளில் ஒழிந்தது!*

*சிவந்த சேலையில் கொழுந்தெழும் துன்பம்,*
*சிதைந்த மனதின் உருக்கம்.*
*கைகள் விரித்தும் பாதுகாப்பு இல்லா,*
*விடிவுகாணா இருள் வேலியில்!*

*வெடிக்குது வீணாக விழிகளின் தாகம்,*
*விரல்களில் உயிர்த்தழுவும் சுடரொளி.*
*நீதி யாருக்கென கேட்கும் நேரம்,*
*பொன்னாகும் நாளும் வந்தே தீரும்!*

*நீ எழு பெண்ணே!*
*அந்த கரிய நிழல்களை பிளந்து,*
*உன் ஒளியால் உலகை நிறை!*


*மாதரே! உனக்கு மகளிர் தின வாழ்த்துக்கள்!*

- பா.லக்சிகா -

# “இன்பா”வின் சிந்தனைத் தொடர் – 27

## கதைகளால் நியமாகி...

**உங்கள் குறிக்கோள் மேல் இரு கண்களையும் வைத்துக் கொள்ளுங்கள்.**



மாணவன் ஒருவன் புகழ்பெற்ற ஆன்மீக குரு ஒருவரை தேடி பல மைல்கள் தூரம் பயணம் போனான். இறுதியில் அவரை சந்தித்தபோது என் இலக்கு நாட்டிலேயே மிகவும் கூர்மையான ஞானம் படைத்தவனாக வேண்டும் என்பதே என்று தெரிவித்தான். அதற்காக சிறந்த குருவை தேடுவதாக சொன்னான்.

அந்த இளைஞனின் உற்சாகத்தை பார்த்து அவனை பொறுப்பேற்று தன்னிடம் உள்ள அறிவை பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டார். எனக்கு ஞானம் கிடைக்க எவ்வளவு காலம் பிடிக்கும் என்று மாணவன் கேட்டான். குறைந்தது ஐந்து ஆண்டுகள் என்றார் குரு. அது மிக அதிகம் அவ்வளவு காலம் என்னால் பொறுக்க முடியாது. மற்ற மாணவர்களை விட இரண்டு மடங்கு கஷ்டப்பட்டு உழைத்தால் என்ன ஆகும் என்று கேட்டான்? பத்து ஆண்டுகள் பிடிக்கும் என்றார் குரு. பத்து ஆண்டுகளா? அப்படியானால் இரவு பகலாக படித்து அர்ப்பணிப்புடன் கவனம் செலுத்தினால் எவ்வளவு காலம் பிடிக்கும் இதற்காக எல்லா நாளும் கனவு கண்டு கொண்டிருக்கிறேன் என்றான் மாணவன். “பதினைந்து ஆண்டுகள்” என்றார் குரு. மாணவன் பெரிதும் ஏமாற்றமடைந்து “நான் ஒவ்வொரு முறையும் குறிக்கோளை அடைய அதிகம் கடினமாக உழைப்பேன் என்று சொன்னபோது நீங்கள் மேலும் அதிகமான ஆண்டுகள் பிடிக்கும் என்று சொல்லுகிறீர்களே என்று கேட்டான். “விடை மிகத் தெளிவாக இருக்கிறது என்றார்” குரு. கிடைக்கப் போகும் பரிசு மீது எப்பொழுதும் ஒரு கண் வைத்துக் கொண்டிருந்தால் உன் குறிக்கோளை அடைய ஒரு கண் மட்டுமே இருக்கும் என்றார் குரு.

**நீதி - குறிக்கோளில் மட்டும் இலக்கு வையுங்கள்.**

# திறன் வகுப்பறை: முக்கியத்துவம், தேவைகள் மற்றும் விளக்கக்குறிப்புகள்

நாகராஜா அம்பிகைபாகன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## திறன் வகுப்பறை

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் கல்வி முறைகள் வேகமாக மாறி வருகிறது. பாரம்பரிய முறைக்கு மாற்றாக, தொழில்நுட்ப பயன்பாட்டுடன் கற்பிக்கும் வகுப்பறைகள் உருவாகி வருவது இந்த மாற்றத்தின் முக்கியமான அம்சம், திறன் வகுப்பறையாகும். திறன் வகுப்பறை என்பது தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் மென்பொருட்கள் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு நவீன வகுப்பறை ஆகும். இதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இடையே ஊக்கமளிக்கும், உடனடி, மற்றும் ஊடக அடிப்படையிலான கற்றல் செயல்முறைகள் நடைபெறும்.



## கற்றல் - கற்பித்தலுக்கான திறன் வகுப்பறையின் முக்கியத்துவம்

- **மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும்**
  வீடியோக்கள், வரைபுகள், அசைவூட்டங்கள் போன்றவை மாணவர்களை ஈர்க்கும்.
- **ஆசிரியர்களின் பயிற்சி திறனை மேம்படுத்தும்**
  பல்லூடக உள்ளடக்கங்கள் (Multimedia content) வீடியோ, ஒலி, படங்கள் இலக்கமுறைக் கருவிகள் (Digital tools ) மூலம் சிக்கலான கருத்துகளை எளிதாக எடுத்துக்கூற முடியும்.
- **உடனடி மதிப்பீடு செய்ய உதவுகிறது**
  நிகழ்நிலை வினாக்கள், கருத்துக் கணிப்புகள் மூலம் உடனடி மதிப்பீடு செய்யலாம்.
- **உலகளாவிய கல்வி வளங்களை அணுகும் வாய்ப்பு**
  இணைய வழி கற்றல் ஆதாரங்களை பயன்படுத்தலாம்.
- **தனிப்பட்ட கற்றல் அனுபவம்**
  ஒவ்வொரு மாணவருக்கும் தமக்கேற்ற உள்வாங்கும் முறையை ஏற்படுத்தும்.
- **சுற்றுச்சூழலுக்கு உகந்தது**
  காகித பயன்பாட்டை குறைக்கும்.

## திறன் வகுப்பறைக்கான தேவைகள் மற்றும் விளக்கக்குறிப்புகள்

திறன் வகுப்பறை நன்கு செயல்பட, கீழ்காணும் வன்பொருள் சாதனங்கள் மற்றும் மென்பொருட்கள் அவசியம்.




## 1. வன்பொருட் தேவைகள் Hardware Requirements

| கூறுகள் **Component** | விளக்கம் **Description** |
|---|---|
| இன்டராக்டிவ் தட்டச்சு பலகை **Interactive Whiteboard** | தொடு செயல்பாடுகள், குறிப்பு எழுதுதல், வீடியோ காட்சி போன்றவற்றுக்காக A digital board that allows touch-based interaction, annotations, and media display |
| ப்ரொஜெக்டர் அல்லது டிஜிட்டல் டிஸ்பிளே **Projector or LED Display** | காட்சிப்படுத்தலுக்கான சாதனம் To project digital content or visuals from a computer or smart device |
| கணினி/ மடிக்கணினி **Computer/ Laptop** | அனைத்து மென்பொருட்களையும் இயக்க பயன்படும் கருவி Central device to operate software, run presentations, and manage files |
| ஆவணவருடும் கருவி **Document Camera** | ஆவணங்களை நேரடியாக காட்சிப்படுத்த உதவும் Captures real-time images of documents or objects for display |
| ஒலி சாதனங்கள் **Speakers and Microphones** | தெளிவான ஒலிக்காக பயன்படும் Audio output and input devices for clear communication |
| இணையவழி கேமரா **Webcam** | இணையவழி வகுப்புகளுக்காக பயன்படும் For virtual classes and video conferencing |
| இணைய இணைப்பு **Wi-Fi Connectivity** | இணையவழி ஆதாரங்களை அணுகுவதற்கு பயன்படும் Essential for accessing online resources and cloud-based tools |
| மின்சாரக்காப்பு **Power Backup (UPS/Inverter)** | மின்தடை இல்லாமல் வகுப்பைத் தொடர பயன்படும் Ensures uninterrupted power supply during sessions |
| திறன் பேசி / ஸ்மார்ட்போன் **Smartphones / Tablets** | மாணவர் கலந்துகொள்ளும் செயல்களுக்காக பயன்படும் For student interaction, assessments, and activities |

2. மென்பொருள் தேவைகள்

| மென்பொருள் வகை **Software Type** | உதாரணம் / பயன் **Example / Purpose** |
|---|---|
| முன்வைப்பு மென் பொருள் **Presentation Software** | PowerPoint, Google Slides – for lectures and visual explanations |
| கற்றல் முகாமைத்துவ முறைமை **Learning Management System (LMS)** | பாடங்கள், பணி, மதிப்பீடு Google Classroom, Moodle – for content delivery, assignments, and grading |
| உடனடி கலந்துகொள்ளும் கருவிகள் **Kahoot, Quizizz Interactive Tools** | விளையாட்டு நுட்ப மதிப்பீடு Kahoot, Nearpod, Quizizz – for student participation and assessment |
| கல்வி வீடியோ தளங்கள் **Educational Content Platforms** | YouTube Edu, Khan Academy – for multimedia content |
| வீடியோ கூட்டங்கள் இணையவழி வகுப்புகளுக்காக **Video Conferencing Apps** | Zoom, Microsoft Teams – for remote learning and hybrid models |
| குறிப்பு எழுதும் கருவிகள் **Annotation Tools** | Microsoft Whiteboard, Jamboard – for drawing, notes, and collaboration |
| பாதுகாப்பு மென்பொருட்கள் **(Security Software)** | வைரஸ், உள்ளடக்க வடிகட்டி மென்பொருட்களின் பாதுகாப்பு Antivirus and content filters to protect devices and users |

திறன் வகுப்பறைகள் என்பது கல்வி துறையில் ஒரு புரட்சிகரமான மாற்றமாகும். இது ஆசிரியர்களுக்கு சிறந்த கற்பித்தல் வாய்ப்பை வழங்குவதோடு, மாணவர்களுக்கான கற்றல் அனுபவத்தையும் மேம்படுத்துகிறது. எதிர்கால கல்விக்கான அடித்தளமாக இது அமையும்.

## நமக்கு நாமே கேட்க வேண்டிய 3 கேள்விகள்..!

ஒரு நான்கு பேர் சேர்ந்து இருக்கும் இடத்தில் நமக்குத் தேவையில்லாத ஒரு விஷயத்தையோ அல்லது... ஒரு நபரை பற்றியோ ஒருவர் மற்றவரிடம் சொல்லுவதற்கு முன்... நமக்கு நாமே மனதிற்குள் மூன்று கேள்விகளை மட்டும் கேட்டுக் கொள்ள வேண்டும். *ஜே ஹெலத்*

1) இந்த பேச்சு தேவைதானா?
2) இந்த பேச்சு யார் மனதையும் காயப்படுத்துமா?
3) இந்த பேச்சு பேசுவதற்கு இது சரியான நேரமா? அல்லது சரியான இடமா?

இந்த மூன்று கேள்விகளையும் நம் மனதிற்குள் கேட்டுக் கொண்டால் நமக்குள் ஒரு மாற்றம் ஏற்படுவதை நம்மால் உணர முடியும். நம்மை சுற்றி உள்ளவர்கள் மத்தியில் நமக்கென்று ஒரு தனி மரியாதை கிடைக்கும். அதுமட்டுமின்றி இந்த பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டால் நம்மை நாமே புறம் பேசுவதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்... *ஜே ஹெலத்*

# உலகப் புகழ்பெற்ற ஓவியங்களில் மறைந்திருக்கும் மர்மங்கள் 2

- S.Zeemeennaj -

ஓவியம் கண்ணெதிரே கண்ட காட்சிகளுக்கும் கனவில் தோன்றும் கற்பனை உருவங்களுக் கும் தூரிகைக் கொண்டு உயிர் கொடுக்கும் அதி அற்புதமான கலை நாம் இன்று அழகியல் சார்ந்த செயல்படாக பார்க்கப்படும். இது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரபலமான ஓவியர்களால் பல ரகசியங்களையும் மர்மங்களையும் கலந்து வைக்கும் கலையாகவே இது காணப்பட்டது. அந்த வகையில் பிரபலமான ஓவியங்களில் மறைந் திருக்கும் நம்ப முடியாத மற்றுமொரு மர்மத்தைப் பற்றி பார்க்கலாம்.....



லியானோ டாவின்சியால் வரையப்பட்ட மற்றுமொரு மர்மங்கள் நிறைந்த ஓவியம் தான் இந்த "இறுதி இராப்போசனம்" (The last supper) கி.பி 1495 முதல் 1498 வரை தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரையப்பட்டது. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து வரையப்பட்ட இவ் ஓவியம் இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன் கடைசியாக தன் 12 சீடர்களுடன் கலந்துகொண்ட விருந்தை குறிப்பதாக வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியத்தை இயல்பாகப் பார்த்தால் பிற ஓவியத்தை போல் சாதாரணமான தோற்றத்தையே நமக்கு தரும் ஆனால் இவ் ஓவியத்தில் பல குறியீடுகளும் மர்மங்களும் மறைக்கப்பட்டு வரையப்பட்டதாக சில வருடங்களுக்கு முன் இதனை ஆராய்ந்த வல்லுனர்களாலும் சதி கோட்பாட்டு ஆராய்வார்களாலும் கண்டறியப்பட்டுள்ளது. இன்றுபோல் புகைப்படக் கருவிகள் எல்லாம் இல்லாத காலத்தில் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஓவியர்களால் வரையப்படும் படங்கள் தான் வரலாற்றில் முக்கியமான இடங்களை அடுத்த அடுத்த தலைமுறை பார்வைகளுக்கு கடத்திச் செல்கின்றது

இப்படி இயேசு கலந்து கொண்ட 'இறுதி இராப்போசனம்' (Last supper) ஓவியமானது 1500 ஆண்டுகள் கழித்து டாவின்சியால் மீண்டும் வரையப்பட்டது ஆனால் சில மர்மங்களுடன் இத்தாலியில் உள்ள சாண்டா கிரேஸ் என்ற என்ற இடத்தில் சுவரொவியமாக வரையப்பட்டுள்ள இந்த ஓவியத்தை நன்கு உற்றுக் கவனித்தால் இயேசுவும் அவரது சீடர்களின் செயல்களும் அவரின் கைகள் காட்டும் திசையும் வழக்கமான விருந்தில் இருக்கும் சூழ்நிலைக்கு மாறாக வினோதமானதாகவே அமைந்திருக்கும் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக கலந்து கொண்டிருக்கும் இந்த விருந்தில் ஒவ்வொரு சீடர்களின் செயல்களும் முக பாவனைகளும் அந்த விருந்தின் செயற்பாடுகளுக்கு சற்று பொருத்தம் இல்லாததாக இருப்பதோடு இயேசுவின் இடது பக்கம் காணப்படும் பெண்ணிற்கும் இயேசுவுக்கும் இடையே காணப்படும் V போன்ற இடைவெளி தான் இந்த ஓவியத்தின் முக்கியமான மர்ம குறியீடாக

கருதப்படுகிறது. அதாவது அந்த இடைவெளியில் இருந்து அந்த புகைப்படத்தை இரண்டாகப் பிரித்து வேறு கோணத்தில் பொருத்திப் பார்த்தால் இயேசுவும் அந்தப் பெண்ணும் ஒன்றாக அமைந்திருப்பது போல தோற்றத்தை வெளிப்படுத்துகிறது.



மேலும் இந்த ஓவியத்தில் நிழல் நபர்கள் தங்கள் கைகளால் குறிக்கும் திசைகளை உள்ள ரொட்டித் துண்டுகளையும் இணைத்தால் ஒரு இசை குறிப்பினை உண்டாகுவதாக இத்தாலியைச் சேர்ந்த ஜீவ வாணி என்ற இசைக் கலைஞர் நிருப்புத்தியுள்ளார் மேலும் அந்த பெண் தான் மேரி மேக்தலின் என்றும் அதனை ஏசுவின் மனைவி என்றும் நீ ரகசியமாக மறைத்தவாறு குறிப்பிட்டப்பட்டும் நோக்கில் தான் இவ் ஓவியம் வரையப்பட்டுள்ளது என்று இன்றுவரை பலராலும் குறிப்பிட்டு உள்ளது.

# பெண்ணின் விடியல்!

- ரொசானி சிங்கராசா -
அல்-ஹிக்மா முஸ்லிம் மாகா வித்தியாலயம், குருணாகல்

நடுத்தர குடும்பம் தான் சாலினியின் குடும்பம். அப்பா பரமேஸ். தபால் நிலைய உத்தியோகத்தர். அம்மா திலகம் வீட்டுவேளைகளுடனேயே இருப்பார். சாலினி தனிப்பிள்ளை என்பதால் அவளுக்கு சிறுவயதிலிருந்தே படிப்பில் ஆர்வம். பாடசாலையில் அனைத்து செயற்பாடுகளிலும் மிக ஆளுமையானவள். ஆசிரியர்களிடத்திலும் ஒரு சிறந்த நற்பண்புள்ள மாணவியாக வலம்வருபவள். உயர்தரத்தில் கலைப்பிரிவில் கற்று பரீட்சையையும் திருப்தியாக நிறைவு செய்கிறாள். பரீட்சை பெறுபேறுக்காக காத்திருக்கும் சாலினி அம்மாவோடு வீட்டில் வேலைகளுக்கு துணையாக இருந்ததோடு, கிடைக்கும் தன் ஓய்வு நேரங்களை எப்படி பயனுள்ளாக மாற்றலாம் என யோசித்தவள் அருகிலுள்ள மாணவர்களுக்கு பாடங்கள் சொல்லிக் கொடுத்தாள். அதனை அப்படியே விரிவெழுகை(zoom) செயலி மூலமாகவும் தொடர அதிகளவான மாணவர்கள் பிறமாவட்டங்களிலிருந்தும் சாலினியின் வகுப்பில் கல்வியை கற்றுக்கொண்டனர்.

சில மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தனது வகுப்பில் பதிவு செய்த காணொளிகளை வகையொலி பக்கத்தில் பதிவேற்றம் செய்தும் மாணவர்களின் கற்றலுக்கு உதவி செய்தாள். அப்படியே இணையம் பற்றிய அறிவினையும் சாலினி வளர்த்துக் கொண்டாள். தனது அறிவினை வளர்த்துக் கொள்ள இணையத்தை பலவழிகளில் பயன்படுத்திக்கொண்டாள். கல்வி தவிர்ந்த புத்தாக்க சிந்தனைகளையும் சிறுவயதிலிருந்தே கொண்டவள் யதார்த்த நிலைக்கேற்ற தலைப்புக்களுக்கு ஏற்ற

கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றையும் தன் சுயஆக்கங்களாக எழுதி வைப்பதை தன் பொழுதுபோக்காக வைத்திருந்தவள். தன் ஆக்கங்களை Blogger என்ற தளத்தில் பதியேற்றம் செய்து பயனாளிகளின் பார்வைக்கு விடுகின்றாள். இவ்வாறு தன் இணையத்தளம் ரீதியான நுழைவை வெற்றிகரமாகவும் அவதானமாகவும் கொண்டு சென்றாள்.

சாலினியின் இந்தச்செயற்பாடுகளுக்கெல்லாம் அவளது தாய் திலகம் துணையாக இருக்கின்றார். அயலில் உள்ளவர்கள் சாலினி இவ்வாறு இணையத்தில் ஆர்வமாக செயற்படுகின்றாள். இதனை நீங்கள் கண்டுக்கவில்லையா திலகம் அக்கா... இவள் பொம்பிள பிள்ளை தானே இவளுக்கு இதெல்லாம் தேவையா... என்று சாலினியின் மேல் அக்கறை கொண்டவர்களும், பொறாமை கொண்டவர்களும் திலகத்திடம் வந்து பேச்சளந்து கொண்டிருப் பார்கள். இல்லை, இல்லை அவள் தன்னுடைய ஓய்வு நேரத்தில் அவற்றில் நேரத்தை செலவுசெய்கிறாள் என்றார் திலகம். அதற்கு செய்வதற்கு அவளுக்கு வேலைகளா இல்லை? சும்மா பொழுது போகவில்லையென்றால் உங்களோடு சேர்ந்து அடுப்பங்கறையில் சமைத்துப் பழகலாம் தானே!... சாலினி இன்னொரு வீட்டில் வாக்கப்படப்போறவள் தானே... இந்த போன், இன்ரநெட்டுகளால இப்ப இளம்பிள்ளைகளுக்கு நடக்கிற பிரச்சினைகள் உங்களுக்கு தெரியாத திலகமக்கா?.... இவள் பாட்டுக்கு சும்மா இருக்காம முகத்தைக் காட்டிக்கொண்டு இருக்கிறாள். நாளைக்கே இவளுக்கொரு பிரச்சினை வந்தா இவள கட்டிக்கொள்ள எவனாவது வருவானா? என்றெல்லாம் நிறைய அக்கறையெடுத்து பேசிக்கொண்டார்கள்.

திலகத்திற்கு இவர்கள் பேசுவது சரியாகவும்தான் மனதில் பட்டது. இருந்தாலும் தன் மகளை விட்டுக்கொடுக்காமல் ஏதோ சொல்லி சமாளித்து அனுப்பி வைத்தாள். வீட்டின் ஒரு தூணில் சாய்ந்தபடி இருந்தவள் தனக்குள்ளே சிந்தனையில் ஆழ்ந்துபோனாள் திலகம். அவர்கள் பேச்சைக்கேட்டு சற்று பயந்து போனவள் சாலினியிடம் இன்று இதைப்பற்றி பேசிவிடவேண்டும் என்று முடிவுடன் இருந்தாள். சாலினியும் வந்தாள். அவளை தன்னருகில் அமரவைத்து உன்னோடு கொஞ்சம் பேச வேண்டும் சாலினி. தண்ணீர் குடித்ததுடன் சொல்லுங்க அம்மா என்றவள் திலகத்திற்கு பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.



சாலினி பக்கத்துவீட்டு பார்வதி அன்ரியும், செல்வி அக்காவும் காலம வந்தவினம்... என்னவாம் கிணத்து தண்ணீ வளவுக்கால வருதாமோ?... என்று திலகத்தின் கதைக்குள் நக்கலாக குறுக்கிட்டாள் சாலினி. இல்லபிள்ள சும்மா விளையாடாம கதைய கேளன் என்று திலகமும் சற்று சாலினியை பேசியவளாய் மீண்டும் தொடர்ந்தாள். அவர்கள் உன்னைப்பற்றித்தான் பேசினார்கள். இன்ரநெட்ல நீயும் உன்ற முகம் வாரதெல்லாம் ஆபத்தாம் என்றாங்க... இப்ப எல்லோரும் நல்லம் இல்லையாம் மா... அவங்க அப்படியெல்லாம் சொன்னதில இருந்து எனக்கும் பயம் வந்திட்டு சாலினி. இப்ப என்னதான்மா சொல்லவாரிங்க? சாலினி நீ மட்டும் தானே எங்களுக்கு பிள்ளை. உனக்கு எதாவது ஒன்றென்றா எங்களால தாங்கமுடியாதுமா... கொஞ்சம் யோசித்துப்பார்த்து இந்த வேலைகளை விட்டுடுமா என்று கெஞ்சாத குறையாக திலகம் கேட்டுக்கொண்டார். என்னுடைய எல்லா முன்னேற்றத் திற்கும் துணையாக நின்ற அம்மாவை இந்தளவு தூரம் பயப்படுத்தியிருக்கார்களே என்று தனக்குள்ளே எண்ணியபடி, திலகத்தின் கைகளை பற்றியபடி, அம்மா.... நான் உங்களது பிள்ளை. நான் தவறிழைக்கமாட்டேன் என உங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது தானே!... பக்கத்துவீட்டுக் காரர்கள் சொல்கிறார்கள் என்று பொம்பிளப்பிள்ளைகள இப்படியே பயப்படுத்தி பூட்டிப்பூட்டி வைப்பதால் தானம்மா, இந்த தொழிநுட்பம் வளந்த காலத்திலயும் அவங்களால வெளில வரமுடியாம இருக்கிறது. நாலுபேர் எதனாலும் பேசட்டும் அம்மா. இது எங்களது வாழ்க்கை. அதை நாங்கள் தான் வாழவேண்டும். என்று திலகத்தின் நம்பிக்கைக்குரியவளாக சாலினி கூறினாள்.

**“சமுகத்திற்கான மாற்றம் உங்களிடமிருந்தே....”**

# 5S முறையும் அவற்றின் விளக்கங்களும்

**- செல்வி. மதுபிரியா பூபாலன் -**
ஆசிரியை, கொ/இந்துக் கல்லூரி




21ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்து சென்று கொண்டிருக்கும் நாம் இன்று பல்வேறு வகையான தொழில்நுட்ப ரீதியில் தமது செயற்பாடுகள் அனைத்தும் நகர்ந்து சென்று கொண்டிருக்கின்றன. அதனடிப்படையில் கல்வியின் தொழில்நுட்ப முறையில் பிரதானமானது இவ் 5S முறையாகும். 2ம் உலகப் போரிற்கு பின்பு ஜப்பான் எதிர்பாராத வகையில் முன்னேறி தொழிற்துறையில் பல சாதனைகளை படைத்துள்ளது. இவ்வாறு தொழிற்துறையில் ஜப்பானியர்களால் கண்டறியப் பட்ட ஒரு முறை 5S முறையாகும். அவை பற்றி நோக்குவோம்.

| ஜப்பானிய வார்த்தை | ஆங்கில வார்த்தை | தமிழ் வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| செய்ரி (Seiri) | Sort | வகைப்படுத்து | தேவையற்றதிலிருந்து தேவையானதை பிரித்தெடுத்தல். |
| சேய்டன் (Seiton) | Straighten/ Set in order | முறையாக வைக்கப்பட்டது | ஒவ்வொன்றுக்குமான இடம் மற்றும் ஒவ்வொன்றும் அதனதன் இடத்தில் சுத்தமாக பயன்படுத்த தயார்படுத்தல். |
| செய்சோ (Seiso) | Shine | பளபளப்பு | ஆய்வுக்காக சுத்தம் செய்தல். |
| செய்கெட்சு (Seiketsu) | Standardize | தரப்படுத்து | நிறைவுக்காக பொதுவான முறைகளை வளர்ப்பது. |
| ஷிட்சுக்கே (Shitsuke) | Sustain | நீடித்துழைக்கச் செய் | இலாபங்களை பிடித்து வைத்துக் கொண்ட மேம்படுத்துவது. |

### 1. வகைப்படுத்து (Sort)

தேவையற்றதிலிருந்து தேவையானதை பிரித்தெடுப்பது. அதாவது நமது பணியிடங்களில் தேவையான பொருட்களை விட தேவையற்ற பொருட்களே கணிசமான இடத்தைப் பிடித்திருக்கும். தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துவதால் நிறைய இடம் கிடைக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது.

### 2. முறையாக வைக்கப்பட்டது (Straighten / Set in order)

ஒவ்வொன்றுக்குமான இடம் மற்றும் ஒவ்வொன்றும் அதனதன் இடத்தில் சுத்தமாக பயன்படுத்த தயார்படுத்தலாம். அதாவது இச் செயன்முறையானது தேடுதல் என்ற தேவையற்ற செயலை முற்றிலுமாக தவிர்க்க உதவுகிறது. இச்செயல் மூலம் ஒரு குறிப்பிட்ட பொருளை எடுப்பதாகும்.

### 3. பளபளப்பு (Shine)

ஆய்வுக்காக சுத்தம் செய்வது. அதாவது பணியிடங்களில் தமது பணிகள் முடிந்ததும் இயந்திரங்களை துடைத்து தூய்மைப்படுத்தி அவற்றை பளபளப்பாக இருக்கும்படி செய்தலை இது குறிக்கிறது. இதன்மூலம் இயந்திரங்களில் ஏற்படும் அல்லது காணப்படும் கோளாறுகளை அறிந்துக் கொள்ளக்கூடியதாக காணப்படும்.

### 4. தரப்படுத்து (Standardize)

நிறைவுக்காக பொதுவான முறைகளை வளர்ப்பது. அதாவது தரப்படுத்தப்பட்ட முறை என்பதை குறிப்பதாகும். இதன்மூலம் பணியிடம் நடக்கும் பாதை, பொருட்கள் வைக்கும் இடம் போன்ற ஒவ்வொனறுக்கும் எல்லைக் கோடுகள் வரையப்படும்.


### 5. நீடித்துழைக்கச் செய் (Sustain)

இலாபங்களைப் பிடித்து வைத்துக் கொண்டு மேம்படுத் துவதாகும். அதாவது முதல் நான்கு S களையும் சரியாப் பயன்படுத்தி நடக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

# Dhora 'WIN' வரிகள்

## மாற்றம் உன்னிடமிருந்து

வழமையாக சென்றுவரும் உணவகம் ஒன்றின் வாயிலில் தினமும் தர்மம் பெறும் ஒருவர் அம்மா என்பதும் ஐயா என்பதும் அவரது வாய்ப்பாடு தான் எனக்கொரு பழக்கம் அந்த உணவகத்திற்குள் நுழையும் போது அவருக்கு பணம் கொடுப்பதில்லை திரும்பி வரும்போது தான் உணவோ பணமோ கொடுப்பது. அவரும் என்னைக்கண்டால் கேட்பதில்லை திரும்பி வரும்போதும் என்னிடம் கேட்டதில்லை ஏதாவது தராமல் போக மாட்டாள் என்பது அவர் எண்ணமாக இருக்கலாம் அன்று உணவகத்தினுள் நுழைய அவரைக்கடக்கும் போது அம்மா அம்மா என்று பலமுறை அழைத்தார் நான் வரும்போது தானே கொடுக்கிறது என்ற எண்ணத்தில் திரும்பவில்லை பலமாக அதட்டி அழைக்கவும் திரும்பினேன் உங்கட காசு விழுந்திட்டு எடுங்க எண்டார் உங்கட தான் Bagக்குள் இருந்து தான் விழுந்தது என்றார் இப்படியும் பிச்சைக்காரர் என எண்ணும் நல்ல எண்ணமுடைய மனிதர் உண்டு என்பதற்கும் நான் அவர் குரலை கண்டு கொள்ளாததற்கும் சேர்த்து குற்ற உணர்வு எஞ்சியிருந்தது அன்று முழுவதும்




ஆம் கேழ் தகவு என்பது எம்மிடம் அருகிவரும் பண்பாகவே நான் கருதுகின்றேன். என்னை பொறுத்தவரை குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை யார் தாம் சொல்வதை செவிமடுக்கிறார்களோ அவர்களுடன் ஒட்டிக்கொள்கின்றார்கள்.

உங்கள் குழந்த்களோ மாணவர்களோ அவர்கள் என்ன கூற விளைகின்றார்கள் என்பதை தயவு செய்து செவிமடுங்கள் அதில் உங்களுக்கு பயனில்லை என்றாலும் நீங்கள் செவிமடுங்கள் அவன் சிந்தனை எதிர்காலம் அனைத்தும் அதில் நிச்சயம் வெளிப்படும் அவன் சிந்தனைத்தவறுகளை திருத்த வேண்டுமாயின் அவன் வாய்மொழிகளை அவதானிக்க வேண்டும் வெறுமனே தொலைபேசிக்குள் மட்டும் மூழ்கிக்கிடக்கும் நாம் அடுத்தவர் வலிகளையும் தொலைபேசி வீடியோக்களில் மட்டும் உணர்கிறோம் Backround music இல்லாமலும் இங்கு எம்மருகில் பலர் உங்களிடம் பகிர ஆயிரம் சோகங்களுடனும் சந்தோசங்களுடனும் காத்திருக்கின்றனர். அவர்கள் வார்த்தை களுக்கும் காது கொடுங்கள்

பேருந்துப் பயணங்களில் அருகில் இருப்பவரை பார்த்து சற்று புன்னகையுங்கள் சில சமயம் யாரிடமும் பகிர வழியில்லாத ஒரு மனப்பாரத்தை அல்லது சோகமொன்றைப் பகிர்ந்து அவர் ஆறுதலடையலாம் ஒரு தற்கொலைகூட உங்களை அறியாது தவிர்க்கப்படலாம் மனிதர்கள் சூள்ந்திருந்தால் தொலைபேசிக்குள் மூழ்குவதை முடிந்தவரை தவிருங்கள்

- டயானா சிவராஜா -

# கல்வி 4.0

## எதிர்கால மாற்றத்திற்கான திறவுகோள் (01)

- Gajooran.G –



### கல்வி 4.0: ஓர் அறிமுகம்

கல்வி 4.0 என்பது நான்காம் தொழிற்புரட்சியின் (Industry 4.0) தேவைகளையும், சவால்களையும் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட ஒரு புரட்சிகரமான கல்வி அணுகுமுறையாகும். இது நவீன தொழில்நுட்பங்களான செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திரக் கற்றல் (ML), தரவு அறிவியல் (Data Science), இணையப் பொருட்கள் (IoT), மெய்நிகர் உண்மை (Virtual Reality - VR) மற்றும் மிகை யதார்த்தம் (Augmented Reality - AR) ஆகியவற்றை கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறைகளில் ஒருங்கிணைக்கிறது. இதன் முக்கிய நோக்கம், மாணவர்களை எதிர்கால வேலைச் சந்தைக்குத் தயார்படுத்துவதுடன், அவர்களுக்கு நுண்ணாய்வுச் சிந்தனை, பிரச்சினை தீர்க்கும் திறன், ஒத்துழைப்பு, படைப்பாற்றல் மற்றும் தகவமைக்கும் திறன் போன்ற 21 ஆம் நூற்றாண்டு திறன்களை வளர்ப்பதாகும். இது வெறும் தகவல் பரிமாற்றத்திற்கு அப்பாற்பட்டு, தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் அனுபவங்கள், செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் (Project-Based Learning) மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்கும் மனப்பான்மையை ஊக்குவிக்கிறது.

### தோற்றம்

கல்வி 4.0 என்ற கருத்து, நான்காம் தொழிற்புரட்சியின் எழுச்சியுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. முதல் தொழிற்புரட்சி நீராவி இயந்திரத்தையும், இரண்டாவது மின்சாரத்தையும், மூன்றாவது கணினிமயமாக்கலையும் கொண்டு வந்தன. நான்காவது தொழிற்புரட்சி, டிஜிட்டல் மற்றும் பௌதிக உலகங்களை ஒன்றிணைக்கும் தொழில்நுட்ப முன்னேற்றங்களால் வகைப்படுத்தப்படுகிறது. இந்த புரட்சி, உற்பத்தி முறைகள், சமூக இடைவினைகள் மற்றும் பொருளாதார அமைப்புகள் ஆகியவற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாற்றங்கள் கல்வித் துறையிலும் பிரதிபலித்தன. பாரம்பரிய கல்வி முறைகள், மாறிவரும் உலகத் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்ததன் விளைவாகவே கல்வி 4.0 பிறந்தது. 2010 களின் நடுப்பகுதியில், உலகப் பொருளாதார மன்றம் (World Economic Forum) போன்ற அமைப்புகள், எதிர்கால வேலைகளுக்குத் தேவையான திறன்கள் குறித்து விவாதிக்கத் தொடங்கின. தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், மனிதர்களுக்குப் புதிய திறன்கள்

தேவைப்படும் என்றும், கல்வி முறைகள் இதைச் சமாளிக்கத் தங்களைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இதன் விளைவாக, கல்வி 4.0 என்பது தொழில்துறை மற்றும் சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு கல்வியை மறுவடிவமைக்கும் ஒரு தவிர்க்க முடியாத தேவையாக உருவானது.

## கல்வியில் மாற்றத்தின் அவசியம்

கல்வி 4.0 ஏன் அவசியமாகிறது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன.

**வேலை உலகின் மாற்றம்:** தானியங்கிமயமாக்கல் (Automation) மற்றும் செயற்கை நுண்ணறிவு காரணமாக பல வழக்கமான வேலைகள் மறையக்கூடும். அதே சமயம், தரவு பகுப்பாய்வு, ரோபாட்டிக்ஸ், சைபர் பாதுகாப்பு போன்ற புதிய துறைகளில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகின்றன. இந்த புதிய வேலைகளுக்குப் புதிய திறன்கள் தேவை. பாரம்பரிய கல்வி முறைகள் பெரும்பாலும் மனப்பாட அடிப்படையிலான கற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன, இது எதிர்கால வேலைகளுக்குத் தேவையான சிக்கலான சிந்தனை மற்றும் படைப்பாற்றலை வளர்ப்பதில் பின்தங்கிவிடுகிறது.

**தகவல் வெடிப்பு:** இணையத்தின் வருகையால் தகவல் எளிதில் கிடைக்கப்பெறுகிறது. இனி ஆசிரியர்கள் வெறும் தகவல் வழங்குநர்களாக இல்லாமல், மாணவர்களுக்கு தகவல்களை எவ்வாறு அணுகுவது, பகுப்பாய்வு செய்வது, விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வது மற்றும் பயன்படுத்துவது என்பதை வழிகாட்டும் கயஉடைவையவழசகளாக மாற வேண்டும்.

**தனிப்பயனாக்கப்பட்ட கற்றலின் தேவை:** ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கற்றல் வேகம், பாணி மற்றும் ஆர்வங்கள் உள்ளன. கல்வி 4.0 தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாணவரின் தேவைகளுக்கும் ஏற்றவாறு கற்றல் அனுபவங்களை தனிப்பயனாக்க அனுமதிக்கிறது. இது மாணவர்களின் ஈடுபாட்டையும் கற்றல் விளைவுகளையும் மேம்படுத்துகிறது.

**வாழ்நாள் முழுவதும் கற்றல்:** வேகமாக மாறிவரும் உலகில், ஒருமுறை கற்றல் என்பது போதுமானதல்ல. புதிய திறன்களைத் தொடர்ந்து கற்றுக்கொள்வதும், ஏற்கனவே உள்ள திறன்களை மேம்படுத்துவதும் அவசியமாகிறது. கல்வி 4.0, வாழ்நாள் முழுவதும் கற்கும் மனப்பான்மையையும், தன்னாட்சிக் கற்றலையும் (Self-directed Learning) ஊக்குவிக்கிறது.

**உலகளாவிய போட்டித்தன்மை:** உலகளாவிய அளவில் போட்டித்தன்மையை நிலைநிறுத்த, ஒரு நாட்டின் கல்வி அமைப்பு புதுமையான, தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான மனித வளத்தை உருவாக்க வேண்டும். கல்வி 4.0 இந்த இலக்கை அடைய உதவுகிறது.

**சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்தல்:** காலநிலை மாற்றம், சுகாதாரப் பிரச்சினைகள், சமூக சமத்துவமின்மை போன்ற உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள, சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் கொண்ட புதிய தலைமுறை தேவைப்படுகிறது. கல்வி 4.0 இத்தகைய திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.

எனவே, கல்வி 4.0 என்பது வெறுமனே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அல்ல, மாறாக கல்வி முறையின் ஒரு முழுமையான மறுபரிசீலனை ஆகும். இது மாணவர்களை எதிர்கால உலகத்திற்குத் தயார்படுத்தி, அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் வெற்றிபெறத் தேவையான திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொடரும்...

## கதை வழி அற மொழி

திரு. ம. நிரேஸ்குமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it

நன்றி : DAN தமிழ் ஒளி

# பேசும் படங்கள்



Art by. ஆ.சஸ்திகா
தரம் 5B
பேராயர் கல்லூரி, கொழும்பு 03



*Art by: M.N.Fathima Nashama*

# குருசேத்திரம்

කුරුසේත්තිරම් Guruseththiram

**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...**

**"குருசேத்திரம்" மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

- சிறுகதை
- தொடர்கதை
- கட்டுரை
- கவிதை
- ஓவியங்கள்

**தங்களின் ஆக்கங்கள் இரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது.**

**சுய ஆக்கங்களாக இருத்தல் வேண்டும், இல்லையேல் உசாத்துணை / பெற்ற மூலம் குறிப்பிடவும்.**

**சிறந்த ஆக்கங்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும் (நிபந்தனைகளுக்குட்பட்டது)**

## குருசேத்திரம் உங்களின் களம்...

**அனைவரும் ஆக்கங்களை ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

guruseththiram@gmail.com

www.guruseththiram.blogspot.com

– குருசேத்திரம் குழுமம் –